தினமணி
11/08/2010

# சாய்ராம் கல்லூரிக்கு பாராட்டு

சென்னை, ஆக.10: சாய்ராம் கல்லூரி குழுமத்தின் சிறந்த கல்வி சேவையைப் பாராட்டி அக்கல்லூரிக்கு விருது வழங்கப்பட்டது.

உலக தமிழ் பல்கலைக்க ழகத்தின் சார்பாக குறிப்பிட்ட சில துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி சென்னையில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில், சிறந்த கல்வி சேவை அளித்து வரும் கல்லூரியாக சாய்ராம் கல்லூரி குழுமமும், சிறந்த மருத்துவ சேவைக்காக லைஃப் லைன் மருத்துவமனையும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

சாய்ராம் கல்லூரி குழுமத்தின் தலைவர் லியோமுத்துவுக்கு 'தேசிய சமூக சாதனையாளர் விருது' இந்த நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.

அரசியல் பிரமுகர்கள், வழக்கறிஞர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.